பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: புரட்டாசி 22 (8—10—68) செவ்வாய் ★ வெளியூர்: புரட்டாசி 23 (9—10—68) புதன் [இதழ்: 93

மக்கட் தொகையும் வருமானமும்

லக்னோ, அக். 8—

"இந்தியாவின் மக்கள் தொகை, உலகின் மக்கள் தொகையில் ஏழில் ஒரு பங்காகும்.

"ஆனால் இந்தியாவின் வருமானமோ, உலகின் வருமானத்தில் பதினேழில் ஒரு பங்கு தான்"

என்று, முன்னாள் திட்ட அமைச்சர் திரு. அசோக் மேத்தா, ஆச்சாரியா நரேந்திர தேவ் நினைவுச் சொற்பொழிவைத் தொடங்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

காங்கிரசு ஆளும் மாநிலத்தில்...

ஆதித்திராவிட மக்களுக்குக்கொடுமை

சுட்டெரிப்பதும் வெட்டிக் கொல்லுவதும் நித்திய நிகழ்ச்சியாகிறது!

சட்டமும்--ஒழுங்கும் கெட்டது எங்கே?--- தமிழகக் காங்கிரசார் பதில் என்ன?

காங்கிரசுக் கட்சி ஆளும் மாநிலமான ஆந்திரத்தில் ஆதித்திராவிடப் பழங்குடி மக்கள் தெருவில் நடமாட முடியாத அளவுக்கு சாதிவெறி தலைவிரித்தாடுகிறது!

ஆதித் திராவிடச் சிறுவன் ஒருவன் சில திங்களுக்குமுன் உயிரோடு எரிக்கப்பட்டதும், அந்தச் சம்பவத்துக்கு ஆந்திர அமைச்சர் ஒருவரின் ஆதரவும் உண்டு என்று சொல்லப்பட்டதும் நினைவிருக்கலாம்.

மீண்டும் அதே ஆந்திரத்தில், காந்தி பிறந்த நாளான அக்டோபர் இரண்டாம் நாள் ஓர் ஆதித் திராவிடக் குடிமகன் கோடரியால் வெட்டப்பட்டு, சாதிவெறிக் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறான்! இப்போது மற்றொரு செய்தி அதே ஆந்திரத்திலிருந்து கிடைத்துள்ளது; கிருஷ்ணா மாவட்டம் துனிக்கோபாடு என்னும் கிராமத்தில் கடந்த அக். 5-ம நாளன்று ஓர் ஆதித் திராவிடர் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்; ஊராட்சித் தலைவரே இந்த அக்கிரமத்தைப் புரிந்திருக்கிறார்! சில ஆதித் திராவிடர் குடிசைகள் எரிக்கப்பட்டிருக்கின்றன!

மற்றொரு கிராமத்தில் ஆதித் திராவிடர்கள் வழிமறிக்கப்பட்டு நடுத் தெருவில் தாக்கப்பட்டிருக்கின்றனர்.

'தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது' என்று கூச்சலிடும் தமிழ்நாட்டுக் காங்கிரசார், தங்கள் கட்சி ஆளும் ஆந்திரத்தில் தொடர்ந்து நடைபெற்றுவரும் இந்த அக்கிரமத்திற்கு என்ன சமாதானம் கூறப்போகிறார்களோ!

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் முன்னாள் தலைவரும் முன்னாள் ஆந்திர முதலமைச்சருமான திரு. சஞ்சீவையாவுக்கு வந்துள்ள தந்திஒன்றில் குண்டூர் மாவட்ட பெரவால் கிராமத்தில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் ஒருவரால் ஆதிதிராவிடர் மூவர் தாக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

சஞ்சீவையா இத்தவலை, 'பேட்ரியாட்'டின் செய்தியாளரிடம் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலின் விளைவாக அக்கிராமத்துஆதித்திராவிட மக்கள் அஞ்சி நடுங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த மூவரும் சிற்றுண்டி விடுதி ஒன்றிலிருந்து திரும்பிக்கொண்டிருந்தனராம்; அப்போது ஊராட்சி ஒன்றியத் தலைவரும் அவரது ஆதரவாளர்களும் இம் மூவரையும் எந்தவிதக் காரணமுமின்றித் தாக்கியிருக்கின்றனர்.

ஆதித்திராவிடர்கள் அதைத் தடுத்தபோது, அவர்களைச் செருப்பாலும் தாக்கியிருக்கின்றனர்.

ஒன்றியத் தலைவரின் கும்பலுக்கு இத்தோடு திருப்தி ஏற்படவில்லை; அவ்வழியே போன ஊராட்சி உறுப்பினர் திரு. எம். இலட்சுமையா என்பவரையும் தாக்கியுள்ளனர்; அவரை ஆடைகளைக் களைந்து நிர்வாணமாகவும் விட்டிருக்கின்றனர்.

பெரவால் கிராம ஆதித்திராவிடர்கள் இது குறித்து உடனடியாகத் தலைமையமைச்சருக்கும் குடியரசுத் தலைவருக்கும், மத்திய உணவு அமைச்சர் செகசீவன் ராமுக்கும் தந்திகள் அனுப்பியிருக்கின்றனர்.

அவர்களிடமிருந்து பதில் ஏதும் வராததால், மாவட்டக் கலெக்டர் அலுவலகத்துக்கு முன்பு உண்ணா நோன்புப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டு வருகின்றனராம்.

முன்வந்த செய்தி

காந்தி பிறந்த நாளில் கட்டாரி தூக்கினர்!

விஜயவாடா, அக். 3—

எந்தக் கஞ்சிக்கசார்லா கிராமத்தில் ஆதித்திராவிடச் சிறுவன் ஒருவன் எரித்துக் கொல்லப்பட்டானோ அதே கஞ்சிக்கசார்லா கிராமத்தில் மீண்டும் ஓர் ஆதித் திராவிடர், பட்டப்பகலில் கோடாரியால் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார்!

காந்தியார் பிறந்த நாளில்தான் இந்தக் கொடுமை நடந்துள்ளது

கொடுமைக்காளானவர் பெயர் சின்னராமையா; வயது 55.

தாக்குண்ட சின்னராமையா காவல் நிலையத்துக்கு எடுத்துச் செல்லும் வழியிலேயே மாண்டுவிட்டார்.

குற்றவாளிகள் யார் எனத் தெரிந்துவிட்டதாம்; ஆனால், இன்னும் உண்மைகளையும், கொலை நடந்த சூழ்நிலைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது என்று அதிகாரபூர்வமாக அறியப்படுகிறது. இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

அண்ணாவின் உடல்நிலை விரைந்து தேறுகிறது

வயிற்றுவலி--தோள்வலி மறைந்தன

வழக்கம்போல் சோறு--காய்கறிகள் உண்கிறார்

நியூயார்க், அக். 7—

அமெரிக்காவில் அறுவைச் சிகிச்சைக்குப்பின் திரு.ஜி. பார்த்தசாரதி இல்லத்தில் தங்கி ஓய்வெடுத்துக்கொண்டிருக்கும் அறிஞர் அண்ணா அவிர்களின் உடல்நிலை விரைந்து தேறிவருகிறது.

இன்று மெமோரியல் மருத்துவமனைக்குச் சென்று இரத்தப் பரிசோதனை செய்துகொண்டார். உடல் நன்கு தேறிவிட்டதா என்பதைத் தெரிந்துகொள்ளவே இந்தப் பரிசோதனை நடத்தப்பட்டது; 'எக்ஸ்-ரே' படமும் எடுக்கப்படவிருக்கிறது. இந்தப் பரிசோதனைகளின் முடிவு வியாழக்கிழமை தெரியும்; அதன்பின், சென்னை திரும்பும் நாள் பற்றி முடிவு செய்யப்படும்.

நண்பகல் உணவாகச் சோறும், காய்கறிகளும் உண்கிறார்; மாலையில் 'ஓவல்' அருந்துகிறார்.

நாள்தோறும் உடற் பயிற்சிக்காக நடந்து உலாவுகிறார்.

நியூயார்க் நகரில் உள்ள மெட்ரோபாலிட்டன் பொருட்காட்சிக்குச் சென்று பார்த்தார்; ஓவியக் காட்சி ஒன்றுக்கும் சென்றுவந்தார்.

அண்ணா அவர்கட்கு இப்போது வயிற்றுவலி சிறிதுகூட இல்லை; கடந்த சில ஆண்டுகளாக இருந்துவந்த தோள் வலியும் குறைந்துவிட்டது. இதற்கென்று தனியாக அமெரிக்காவில் சிகிச்சை செய்துகொள்ளத் தேவையில்லை என்று மருத்துவர்கள் கூறிவிட்டனர்.

தமிழகத்திலிருந்து விமானம்மூலம் வரும் பத்திரிகைகளை அண்ணா அவர்கள் படிக்கிறார்கள்.

இத்தகவல்களை, திரு. இராசாராம் அவர்கள், திரு. சி.பா. ஆதித்தனாருக்குத் தொலைபேசி மூலம் சொன்னார்.

விடுதலை வீரருக்கு மரியாதை

அஞ்சல் தலையில் பகவத் சிங் உருவம்

புதுடில்லி, அக். 8—

நாட்டின் விடுதலைக்காகத் தூக்கு மேடையில் உயிரைத் தியாகம் செய்த மாவீரன் பகவத் சிங்கை கௌரவிக்கும் வகையில் -- அவரது நினைவாக இந்திய அஞ்சல் -- தந்தித் துறையினர், அக். 19-ம் நாளன்று தனி அஞ்சல் தலை வெளியிடுகின்றனர்.

பகவத் சிங்கின் நினைவுச் சின்னம் உள்ள உசெயினிவாலா என்னுமிடத்தில், உள்துறை அமைச்சர் சவாண் தலைமையில் அஞ்சல் தலை வெளியீட்டு விழா நடைபெறும்; அஞ்சல் -- தந்தித் துறை அமைச்சர் இராம் சுபாக் சிங், அஞ்சல் தலையை வெளியிடுவார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக, மாவீரன் பகவத் சிங் அன்னையார் கலந்துகொள்வார்.

அரியானாவில் இந்திக்கு மகுடம்!

டில்லி அரசின் முடிவாம்

சண்டிகார், அக். 8—

அரியானாவில் ஆட்சி மொழியாக இருந்துவரும் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு, இந்தி மொழியை ஆட்சிமொழியாக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

வருகிற சனவரி 26-ஆம் நாள் (குடியரசு நாள்) முதல் எல்லா அலுவல்களும் இந்தியிலேயே நடைபெறுமாம்.

நீதிமன்றத் தீர்ப்புகள் இந்தியிலாம்!

மாதந்தோறும் வெளியீடாம்!

புதுடில்லி, அக். 8—

அடுத்த ஆண்டு சனவரித் திங்கள் முதல் -- மாதம் ஒருமுறை -- உயர் நீதிமன்றங்களின் முக்கியத் தீர்ப்புகள் இந்தி மொழியில் தொகுத்து வெளியிடப்படுமாம்.

இந்த வெளியீட்டுக்கு, 'உச்ச நியாயாலய நிர்ணய பத்திரிகா' எனப் பெயரிடப்படுமாம்.

இந்தியாவில் முதன்மை பெற்று விளங்கும் 'ஆல் இண்டியா ரிப்போர்ட்டர்' என்ற சட்டப் பத்திரிகையின் வடிவையொட்டி இது வெளியிடப்படுமாம்.

இந்திய சட்டத் துறையின் இந்தி ஆலோசனைக் குழு மேற்கண்ட முடிவினைச் செய்திருக்கிறது. சட்ட அமைச்சர் திரு. பி. கோவிந்த மேனன் தலைமையில் மேற்படி ஆலோசனைக் குழு கூடியது.

முதலாளிகள் பணம் ரூ. 2 இலட்சம்!

சோஷலிசம் பேசும் காங்கிரசு மாநாட்டுக்கு!

பனாஜி, அக். 7

அடுத்த மாதம் 4 5, 6 ஆகிய நாட்களில் இங்கு நடைபெறவிருக்கும் அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் மாநாட்டுக்கு ரூ. 4 இலட்சம்வரை செலவிடவிருப்பதாகவும், இதற்காகக் கோவா மாநிலத் தொழிலதிபர்கள் மட்டும் ரூ. 2 இலட்சம்வரை கொடுத்திருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் பாபுபாய் சினாய் தெரிவித்தார்.

ஐயாயிரம் பேர் அமர்ந்திருப்பதற்கான தனிப் பந்தல் ரூ.1 இலட்சம் செலவில் அமைக்கப்படும் என்றும், மேலும் இரண்டாயிரம் பேர் அமருவதற்கான வசதியும் செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

இசை நிகழ்ச்சிகள், கிராமியக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவை மூன்று மணி நேரம் நடத்த ஏற்பாடாகியுள்ளதாம்!

மாநாட்டுப் பிரதிநிதிகளுக்காக நூறு கார்களும், ஏராளமான பஸ்களும் அமர்த்தப்படுமாம்!

★

கெடுதலே செய்கின்றனர்

இந்தி வெறியர்களின் போக்கு-- முன்னாள் ஆளுநர் இடித்துரை

ஜெய்ப்பூர், அக். 8—

"வெறும் கூப்பாடுகள் மூலம் இந்தியைத் தேசிய மொழியாக்கிவிட முடியாது!

"வெறும் வாயளவில்தான் காங்கிரசுக் காரர்கள். இந்திக்கு ஆதரவு திரட்டுகிறார்கள்!

"சேத் கோவிந்த தாஸ் போன்றவர்கள் -- அவர்களுடைய செயலின் மூலம் -- இந்தி மொழிக்குக் கெடுதலே செய்து வருகிறார்கள்"

என்று, அசாமின் முன்னாள் ஆளுநரான ஜெயராம் தாஸ் தௌலத்ராம் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

புதுவைக்குப் புதிய ஆளுநர்

புதுவை, அக். 8—

புதுவை மாநிலத்தின் ஆளுநராக மைசூரின் முன்னாள் முதலமைச்சரான பாசப்ப தானப்ப ஜாட்டி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இப்போதைய ஆளுநரான திரு. சீலம் அவர்களின் பதவிக் காலம் முடிந்ததும், திரு. ஜாட்டி பதவி ஏற்பார்.

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 புரட்டாசி 22 (8—10—68) செவ்வாய்

மாநகராட்சித் தேர்தல்

அக். 27-ம் நாள் மாநகராட்சி மன்றத்துக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. இத்தேர்தலில் முன்னேற்றக் கழகம் தனது தோழமைக் கட்சிகளுடன் 120 தொகுதிகளிலும் காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகிறது.

96 தொகுதிகளில் நமது முன்னேற்றக் கழகம், காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகிறது; மீதமுள்ள 24 தொகுதிகளில் ஏழு தொகுதிகளில முஸ்லீம் லீகும், மற்ற ஏழு தொகுதிகளில் சுதந்தரக் கட்சியும், காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகின்றன; எஞ்சியிருக்கக்கூடிய 10 தொகுதிகளில் இடதுசாரிப் பொதுவுடைமைக் கட்சி, வலதுசாரிப் பொதுவுடைமைக் கட்சி, திராவிடர் கழகம், தமிழரசுக் கழகம், உழைப்பாளர் கட்சி ஆகிய ஐந்து அமைப்புக்களும் தலைக்கு 2 தொகுதிகளில், காங்கிரசு வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடுகின்றன. இதுதான், மொத்த வட்டங்களிலும் போட்டியிடுகின்ற கட்சிகளைப் பொறுத்தவரையிலும் இருந்திடக்கூடிய உண்மை நிலவரமாகும்.

வழக்கம்போல் இந்தத் தேர்தலிலும் சில தனி நபர்கள், ‘ஜன சங்கம்’ என்ற பெயரில் போட்டியிட முனைந்திருக்கின்றனர். ‘ஜன சங்கம் என்ற பெயராலும் சிலர் தேர்தலில் கலந்துகொண்டிருக்கின்றனர்’ எனக் குறிப்பிடுவதைத் தவிர்த்து, இப்போட்டியைப் பற்றிச் சிந்திப்பதற்கு எதுவுமில்லை.

முன்னேற்றக் கழகம், தோழமைக் கட்சிகள் ஆகிய அமைப்புக்கள் ஒன்றுபட்டு ஓரணியாகத் திரண்டு, இத்தேர்தலில்தான் முதன் முறையாகக் காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுகின்றன என்பதில்லை. இதுவரை காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுவதில் தனித்துச் செயல்பட்டு வந்திருக்கின்ற வலதுசாரிப் பொதுவுடைமைக் கட்சியும், அப்போக்கை ஒதுக்கிவிட்டு, கழகத்துடனும் தோழமைக் கட்சிகளுடனும் ஒருங்கிணைந்து காங்கிரசுக் கட்சியை எதிர்க்க முன்வந்திருப்பது குறிப்பிடத்தக்க சிறப்பு நிலையாகும்.

இது, விரும்பி வரவேற்கத்தக்க நிலையாகும். இந்த வியத்தகு பணியை வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கின்ற -- கழகத் தேர்தல் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற கழகத் தலைவர்கள், பாராட்டுக்குரியவர்கள் ஆவர்.

தேர்தல் பொறுப்பினை ஏற்றுள்ள கழகத் தலைவர்கள் இத்துறையில் புரிந்திருக்கின்ற சாதனையின் சிறப்பும், அச்சாதனையில் இடம் பெற்றிருக்கின்ற உண்மை நிலையும் ஆங்கில நாளிதழான ‘மெயில்’ நிருபரின் குறிப்பின் வாயிலாக வெளிப்பட்டிருக்கிறது. நிருபரின் குறிப்பு இதுதான் :—

“இடதுசாரி–வலதுசாரி ஆகிய இரண்டு பொதுவுடைமைக் கட்சியிடத்திலும் சுதந்தராவுக்குள்ள வெறுப்பு தெரிந்த விஷயம். ஆனால் சமீபத்தில் செய்துகொள்ளப்பட்டிருக்கும் தேர்தல் உடன்பாட்டின்படி, சுதந்தரா வேட்பாளருக்கும்— பொதுவுடைமை வேட்பாளருக்கும் எங்குமே மோதல் ஏற்படாது.

“பரஸ்பரம் எப்பொழுதும் எதிர்த்துக்கொண்டிருக்கின்ற சுதந்தராவும்–பொதுவுடைமைக் கட்சியும் ஒன்றுபடச் செயல்பட வைத்த பெருமை தி. மு. கழகத்துக்குக் கிடைத்த் வெற்றியாகும்.”

கழகத்தவர் அனைவரும் பெருமிதத்துடன் பெருமைப்படத்தக்க இத்தேர்தல் ஏற்பாட்டை நினைத்து நினைத்து மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் முன்னேற்றக் கழகத்தின் உறுப்பாகவும் உயிராகவும் செயல்பட்டு வந்திருக்கின்ற கழகத்தைச் சேர்ந்த சிலர், கழகத் தேர்வுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள வேட்பாளர்களுக்கு எதிராகச் சில தொகுதிகளில் வேட்பு மனு பதிவு செய்திருப்பது அம்மகிழ்ச்சியைச் சிதறடித்து வருந்தச் செய்வதாக உள்ளது. தேர்வு செய்யப்பட்டிருக்கின்ற கழக வேட்பாளருக்கு எதிராகப் போட்டியிட முனைந்து வேட்பு மனு பதிவு செய்திருக்கின்ற கழகத் தோழர்கள், தாங்கள் செய்யத் துணிந்துள்ள காரியம் நியாயமானதுதானா என்பதை, தம் மனச்சான்றின் வழி நின்று ஒருமுறைக்குப் பலமுறை ஆராய்ந்துபார்த்தல் வேண்டும்.

கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வட்டத்திலும் வேட்பாளராகப் போட்டியிடத் தேர்வுக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர்கள் மட்டும்தான் அதற்குரிய தகுதியைப் பெற்றிருப்பவர்கள் என்பதில்லை. கழக வேட்பாளராக மாநகராட்சிமன்றத் தேர்தலில் போட்டியிட, ஒவ்வொரு தொகுதியிலும் அதற்குத் தேவைப்படக்கூடிய தகுதிவாய்ந்த கழகத்தவர் பலர் உண்டு என்பதைத் தேர்வுக் குழுவும் அறியும் -- கழகத்தவர்களுக்கும் தெரியும்.

கழகத்தின் தனிப் பெரும் தலைவரான அறிஞர் அண்ணா அவர்கள், வெகு தொலைவிலுள்ள அமெரிக்காவில் சிகிச்சை பெற்று வருகின்ற இந்த நேரத்தில், கழகத தேர்வுக் குழுவின்மீது சுமத்தப்பட்டிருந்த பொறுப்பு, பலருடைய அதிருப்தியையும் --- பகையில்லை என்றாலும் வெறுப்பையும், பழிச் சொல்லையும் தேடித் தரக்கூடியதாகும். பாராட்டுதலையும் இகழ்ச்சியையும் ஒத்த நிலையில் கருதி, ‘காங்கிரசு வேட்பாளர்களை எதிர்த்துப் போட்டியிட்டு வெற்றி கண்டே ஆகவேண்டும்’ என்ற ஒரே குறிக்கோளுடன், கழகத் தேர்தல் குழு, வேட்பாளர்களைத் தேர்வு செய்திருக்கிறது. எனவே, சொந்த விருப்பு வெறுப்பை முன்னிட்டு வேட்பாளர்களைத் தேர்தல் குழு தேர்வு செய்யவில்லை என்ற உண்மையை, ‘நம்மைத் தேர்வு செய்யவில்லையே’ என ஏமாற்றம் அடைந்து -- அந்த ஏமாற்றத்தின் விளைவாக எரிச்சலும் அடைந்து -- கழக வேட்பாளருக்கு எதிராக வேட்பு மனு பதிவு செய்திருக்கின்ற கழகத் தோழர்கள் தெள்ளத் தெளிய உணர்ந்து கொள்ளவேண்டும்.

இவ்வுண்மையை உணர்ந்து கொண்டால்தான், கழக வேட்பாளருக்குப் போட்டியாகத் தாங்களும் வேட்பு மனுச் செய்திருப்பது நியாயமற்றது என்பதுடன், தேவையற்றது -- தங்களுக்கே அழிவைத் தரக்கூடியது என்பதையும் எளிதில் உணர்ந்துகொள்ள முடியும்.

கழகத் தேர்வுக் குழுவிற்கு, கழகத் தோழர்கள், எந்தக் கட்சியை எதிர்த்துப் போட்டியிடுவதற்காகத் தங்களைத் தேர்வு செய்யுமாறு மனுச் செய்துகொண்டனர்? ‘கழகத்தின் சார்பில் காங்கிரசு வேட்பாளர்களை எதிர்த்துத் தோற்கடிப்பதற்காகத்தான்’ என்பது வெளிப்படை.

தேர்வு செய்யப்பட்ட கழகத் தோழர்கள் வேட்பாளர் மனுவைப் பதிவு செய்திருக்கின்ற தொகுதிகளில், தேர்வு செய்யப்படாது விடுபட்டுப்போன கழகத் தோழர்கள், வேட்பாளர்களாகத் தங்கள் மனுக்களையும் பதிவு செய்யத் துணிகின்றனர் என்றால், அதன் பலனாக, கழகத்தின் சார்பில் காங்கிரசுக் கட்சியை எதிர்த்துப் போட்டியிட்டுக் கழகத்துக்கு வெற்றியைத் தேடித் தரவேண்டும் என்ற தங்களுடைய அரசியல் மூல இலட்சியத்துக்கே குழி பறித்துக்கொண்டவர்களாகின்றனர்.

‘ஒவ்வொரு தொகுதியிலும் காங்கிரசுக் கட்சியை முறியடிக்க வேண்டும்’ என்ற அரசியல் நோக்கத்தில்தான், ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள கழகத் தோழர்கள், தங்களைக் கழக வேட்பாளர்களாகத் தேர்வு செய்யும்படி தேர்வுக் குழுவுக்கு எழுத்துமூலம் மனுச் செய்துகொண்டனர். அதே முடிவினைத்தான், குழுவிடமும் சாட்சியமாகத் தெரிவித்தனர்.

உண்மை இவ்வாறு இருந்திட, தங்களைக் கழக வேட்பாளராகத் தேர்வு செய்யப்படாததால், தேர்வு செய்யும் வாய்ப்பை இழந்த தோழர்கள், அவ்விழப்பின் விளைவாக ஏற்பட்டிருக்கின்ற ஆத்திரத்துக்கு இரையாகி, காங்கிரசுக் கட்சியை வீழ்ச்சியுறச் செய்வதற்குப் பதிலாகக் கழக வேட்பாளருக்கு இருந்திடக்கூடிய மக்கள் ஆதரவு சிறிதளவாவது சிதறிவிடக்கூடிய -- விரும்பத்தகாத பணியை, நெஞ்சினாலும் தீண்டலாமா? அது, தீவினை அல்லவா?

எந்த ஒரு தொகுதியிலும், ‘காங்கிரசு வெற்றிபெற வேண்டும்’ என்பதை விரும்பக்கூடிய கழகத் தோழர் ஒருவரும் கிடையாது. ஒரே நேரத்தில் காங்கிரசு வேட்பாளரையும், அதிகாரபூர்வமான கழக வேட்பாளரையும் தோற்கடித்துத் தங்களால் வெற்றி பெற்றுவிட முடியும் என்ற நினைப்புடன்தான், கழகத்தைச் சேர்ந்த தேர்வு செய்யப்படாத தோழர்கள், சிற்சில வட்டங்களில் சுயேச்சையாகப் போட்டியிட முனைந்திருக்கின்றனர். அவர்கள் நினைப்பு தவறானது. ‘தனி நபர்கள்’ என்ற முறையில், தங்களுடைய வலிவை அவர்கள் கூடுதலாக மதிப்பிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு வட்டத்திலும் கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிடுவதற்குரிய தகுதி பெற்றுள்ளவர்கள் ஏராளம், ஏராளம். இவர்கள் அனைவரையும் ஒரே தேர்தலில் -- ஒரே காலத்தில் வேட்பாளர்களாகத் தேர்வு செய்ய முடியாது.

மாநகராட்சி மன்றத்துக்கு 120 இடங்கள்தான் வரையறை செய்யப்பட்டுள்ளன; எனவே, சொந்த விருப்பு வெறுப்பை ஒதுக்கி வைத்துவிட்டு -- ‘தேர்தலில் காங்கிரசுக் கட்சியை முறியடிக்க வேண்டும்’ என்ற ஒன்றை மட்டுமே இலக்காகக்கொண்டு -- கழக வேட்பாளர்களைத் தேர்வுக் குழு தேர்வு செய்திருக்கிறது. தேர்வுக் குழுவின் பணியில் குற்றங்காண்பதற்கு ஒன்றுமில்லை.

தங்களைத் தேர்வு செய்யாததனால் ஏமாற்றம் அடைந்த கழகத்தவர்களுக்கு அதிருப்தி இருப்பது இயல்பேயாகும். இரண்டொரு நாட்களில் அந்த அதிருப்தி, இருந்த இடம் தெரியாமல் தொலைந்து போகும்.

‘காங்கிரசுக் கட்சியை வெற்றிபெற விடமாட்டோம்’ எனச் சூளுரைத்துக்கொண்டு -- காங்கிரசுக் கட்சிக்கு எதிராகப் போட்டியிடுவதாக நினைத்துக்கொண்டு -- கழக வேட்பாளருக்குப் போட்டியாகச் சிற்சில வட்டங்களில் வேட்பு மனு பதிவு செய்திருக்கின்ற கழகத்தவர், உடனடியாகத் தங்கள் வேட்பு மனுவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். இதுவே நமது வேண்டுகோள். இதுதான் கழகத்துக்கும் பெருமை -- அவர்களுக்கும் பெருமை!

தங்களைத் தேர்வு செய்யவில்லையே என்பதற்காகச் சுயேச்சையாக வேட்பு மனு பதிவு செய்திருக்கின்றவர்கள், ஒன்றை மட்டும் திரும்பத் திரும்ப ஆராய்ந்து பார்க்க வேண்டும். தங்களைக் கழக வேட்பாளர்களாகத் தேர்வு செய்துவிட்டு, இப்பொழுது தேர்வு செய்யப்பட்டிருப்பவர்களைத் தேர்வு செய்யாமல் தேர்வுக் குழு விட்டுவிட்டது என வைத்துக்கொள்ளுவோம்; அப்பொழுது, தாங்கள் இப்பொழுது சுயேச்சையாக வேட்பு மனு கொடுத்திருப்பது போலவே, ஏமாற்றமடைந்த கழகத்தவர்களும் சுயேச்சையாக வேட்பு மனு கொடுப்பதாக வைத்துக்கொள்ளுவோம்.

அப்பொழுது, அவர்கள் போக்கை -- அதே தவறை -- கட்டுப்பாட்டைக் குலைத்திடக்கூடிய சிறுசெயலை -- அரசியல் ஒழுங்கீனத்தை -- இன்று அதையே செய்யத் துணிந்திருக்கின்ற கழகத்தவர்கள் தாங்கிக்கொள்ளவா செய்வார்கள்? வன்மையாகக் கண்டிக்கமாட்டார்களா? ‘கழகத்தைக் காட்டிக் கொடுக்கின்ற ஈனச் செயல் -- கட்டுப்பாட்டைக் குலைக்கக்கூடிய இழிசெயல் -- முதல் தரமான துரோகத்தனம்’ என்றெல்லாம் இவர்கள், அப்போக்கைக் கண்டிக்கமாட்டார்களா?

‘ஏறிக்கொள் என்றால் மாட்டுக்குக் கோபம் -- இறங்கிக்கொள் என்றால் நொண்டிக்குக் கோபம்’ என்கின்ற பழமொழியை நினைவுபடுத்திக்கொண்டு, தங்களுடைய இன்றையச் செயல், ‘முறைகேடானது’ என முடிவு கட்டி, தம்மிச்சையாகக் கொடுத்திருக்கின்ற வேட்பு மனுவை, உடனடியாகக் கழகத் தோழர்கள் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும். அந்தத் திருவினையில்தான், தங்களுக்குள்ள கழகப் பற்றையும் பிடிப்பையும் அவர்கள் நிலைநாட்டிக் கொண்டவர்களாவர்.

—கா. [illegible]

அமைச்சர் மதியழகன் பெருமிதம்

கரூர், அக். 7—

“விற்பனை வரிமூலம் தமிழக அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 54 கோடி வரை கிடைக்கிறது; இதற்கு அதிகாரிகளும் வணிகப் பெருமக்களும் அளித்துவரும் ஒத்துழைப்பே காரணமாகும்”

என்று உணவு அமைச்சர் திரு. மதியழகன், கரூர் வர்த்தகக் கழகம் அளித்த வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

மேலும் பேசுகையில் அமைச்சர் குறிப்பிட்டதாவது:—

“வணிகச் சமூகத்தை வரி வசூலிக்கும் அதிகாரிகள் துன்புறுத்தினால் அவர்கள்மீது அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது; அதே நேரத்தில், அரசுடன் வணிகர்கள் முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.”

ஓய்வு நேர வேலைத் திட்டம்

சென்னை, அக். 5—

கல்லூரி மாணவர்கள் ஓய்வு நேரங்களில் பணியாற்றிப் பணம் சம்பாதிக்கக்கூடிய ஓய்வு நேர வேலைத் திட்டமொன்றை அம்பத்தூர் ‘லயன்ஸ் கிளப்’ என்னும் சங்கத்தினர் துவக்கியுள்ளனர்.

தோட்ட வேலை முதல் பல்வேறு 110 ரகப் பணிகளைக் கொண்டதாக இத்திட்டம் அமைந்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் மாதம் சுமார் ரூ 25 வரை ஒரு மாணவர் சம்பாதிக்க முடியும்.

இத்திட்டத்தை கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் துவக்கிவைத்து, ‘திட்டம் வெற்றி பெற வேண்டும்’ என்று வாழ்த்தினார்.

இந்தத் திட்டத்தின்படி கல்லூரி மாணவர்கள் தங்கள் ஓய்வு நேரத்தில் சுமார் 1 முதல் 2 மணி நேரம் வரை வேலை செய்யவேண்டியிருக்கும்.

நூல் நிலையங்களில் உள்ள புத்தகங்களைச் சுத்தமாக்கி ஒழுங்காக அடுக்கிவைப்பது—அஞ்சல்கள் அனுப்புவது—அஞ்சல் நிலையங்களில் மணியார்டர், பதிவுத் தபால் ஆகியவற்றைப் பெறுவது—குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவது — டைப் அடிப்பது ஆகியவை உட்பட ஏறத்தாழ 110 வேலைகள் இந்தத் திட்டத்தின்கீழ் மாணவர்களுக்குத் தரப்படும்.

மேல் நாடுகளில் ஓய்வு நேரங்களை மாணவர்கள் பயனுள்ளவகையில் அமைத்துக்கொண்டு தங்களுக்கு வேண்டிய பணத்தை சம்பாதித்துக் கொள்கிறார்களென்றும் அதைப்போல சென்னை நகரில் உள்ள வசதியற்ற மாணவர்களும் சம்பாதித்துக் கொள்வதற்கு இந்தத் திட்டம் உதவுமென்றும் ‘லயன்ஸ் கிளப்’ தலைவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் பங்குபெற ஏராளமான மாணவர்கள் முன்வந்துள்ளனர் என்றும், 300 பேர்வரை வரக்கூடும் என்று எதிர்பார்த்திருந்ததற்கு மாறாக, சுமார் 1,000 மாணவர்கள் எந்தவிதமான வேலையையும் செய்யத் தயாராக இருப்பதாக விண்ணப்பித்துக் கொண்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் 25 மாணவர்களுக்கு வேலை தரப்பட்டுள்ளதென்றும், இன்னும் சில நாட்களில் 75 மாணவர்கள் வரை பயன்படுத்த முடியும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசு ஊழியர்களுக்கு எதிராகப் பகிரங்க விசாரணை

இந்த ஆண்டு ஆகஸ்டுத் திங்களில் மத்தியப் புலன் விசாரணைப் பிரிவு பகிரங்க விசாரணைக்காக எடுத்துக்கொண்ட 189 வழக்குகளில் 30 கெசட் பதிவு அதிகாரிகளும் வேறு 194 அரசு ஊழியர்களும் சம்பந்தப்பட்டிருந்தனர்.

மத்திய எச்சைஸ் இலாகா இன்ஸ்பெக்டர் ஒருவரும், இரயில்வே இலாகா இன்ஸ்பெக்டர் ஒருவரும் இலஞ்சம் வாங்கியபோது கையும் களவுமாகப் பிடிபட்டனர்.

பரிசிலனை மாதத்தில் 19 வழக்குகளில் புலன் விசாரணை முடிவுற்று வழக்குத் தொடரப்பட்டது; ஆறு கெசட் பதிவு அதிகாரிகளுக்கும் வேறு 10 அரசு ஊழியர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

பரிசிலனை மாதத்தில் 26 வழக்குகளில் குற்றவாளிகள்மீது தண்டனை விதிக்கப்பட்டது. நான்கு கெசட் பதிவு அதிகாரிகளும், வேறு 21 அரசு ஊழியர்களும், தனியார் 15 பேரும் தண்டனைக்குள்ளாயினர். சிறைத் தண்டனையோடு மொத்தம் ரூ. 60,349 அபராதமும் விதிக்கப்பட்டது.

நிறைகளை மட்டுமன்றிக் குறைகளையும் சுட்டிக் காட்டுங்கள்

நல்லாட்சி நிலவ எழுத்தாளர் ஆற்றவேண்டிய கடமை

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் வலியுறுத்தல்

சென்னை, அக். 8—

"ஆட்சியில் உள்ளவர்களைப் பாராட்டிக்கொண்டே இருங்கள் என்று உங்களை நான் கேட்கமாட்டேன்; குறைகளையும் சுட்டிக்காட்ட வேண்டும். ரோஜாவின் மணத்தைச் சொல்லும்போது, அதில் உள்ள முள்ளைப் பற்றியும் சொல்லத்தான் வேண்டும்.

"நீங்கள் என்னைப் பாராட்டிக்கொண்டே இருப்பீர்களானால், நல்லாட்சி நடைபெற அது உதவாது; என் தலை கனத்துவிடும்; கண்ணிலே, காதிலே சதை வளர்ந்துவிடும்; நாக்குத் தடிப்பாகிவிடும்; ஆகவே, அவ்வப்போது, நாட்டில் நிலவுகின்ற குறைபாடுகள் எழுத்தாளர்கள் வழியாக அரசுக்குத் தெரியப்படுத்தப்பட வேண்டும்"

என்று, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், கடந்த 4-10-68 அன்று தமிழ் எழுத்தாளர் சங்க விழாவில் கலந்துகொண்டு சொற்பொழியாற்றுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் தெரிவித்ததாவது:—

எழுத்தாளன் யார்?

"எழுத்தை எழுதுபவனெல்லாம் எழுத்தாளனாகிவிட முடியாது; அவன் வெறும் எழுத்தாளன் தான். எழுத்தை ஆள்பவன் எழுத்தாளன். எண்ணத்தில் தோன்றியதை எழுத்திலே வடித்து, சுருங்கச் சொல்லி விளங்கவைக்கும் தன்மையில் நல்ல சொற்செட்டோடு, 'எந்தச் சொல்லை எங்கே பயன்படுத்தினால் பொருத்தமாக இருக்கும்' என்பதைப் பார்த்துத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்துபவன் தான் எழுத்தாளன்.

உரைநடை எழுதுவோர் மட்டுமல்ல; கவிதை எழுதுவோர் கூட எழுத்தாளர்கள்தாம்.

பல துறைகளிலும் எழுத்தாளர்கள் இருக்கின்றனர்; பாடல்கள் புனைவோரும், பாட நூல் எழுதுவோரும், புலவர் பெருமக்களுக்கென்றே எழுதுவோரும், பாமர மக்களுக்காக எழுதுவோரும், குழந்தைகளுக்கென எழுதுவோரும், ஆசிரியர்கட்கென எழுதுவோரும், பத்திரிகைட்கு எழுதுவோரும் எழுத்தாளர்களேயாவர்.

கடமை ஒன்று உண்டு

இவர்களெல்லாம் இந்த அரசுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்றால், 'பாராட்டிக் கொண்டே இருக்கவேண்டும்' என்று பொருளல்ல; அரசுக்கு அவ்வப்போது சொல்லவேண்டியதைச் சொல்லவேண்டும்.

நிறைகளைப் பாராட்டுவதும் குறைகளைச் சுட்டிக்காட்டுவதும் எழுத்தாளர்கள் கடமையாகும்.

'குறை கூறவேண்டும்' என்ற நோக்கத்தோடு அல்லாமல், உண்மையான -- நியாயமான குறைகளைச் சுட்டிக்காட்டினால் அவற்றைக் களைய அரசுக்கு வாய்ப்பு ஏற்படும்.

அன்றாடம் பத்திரிகைகளில் ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதப் பகுதியில் கூறப்படும் குறைபாடுகள் -- முறையீடுகளையெல்லாம்கூட நான் கோடிட்டுக் காட்டி, தொடர்புடைய துறைகளின் அதிகாரிகளுக்கு அனுப்பிவைக்கிறேன்; அப்படிப் பட்ட குறைகள் இருப்பது உண்மையா என்று கேட்கிறேன்.

அன்றைய நெடுஞ்செழியனும் இன்றைய நெடுஞ்செழியனும்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்கூட, 'புலவர் பெருமக்கள் தம்மைப் புகழ்ந்து பாட வேண்டும்' என்று விரும்பி, 'அப்படிப் பாடக்கூடிய வகையில் தமது அரசு நடைபெற வேண்டும்' என்று எண்ணினான்.

'தம் அரசு தவறு செய்யுமானால்-- முறை தவறி நடக்குமானால்-- மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட புலவர் பெருமக்கள் தம்மைப் பாடாது ஒழியட்டும்' என்று கூறினான். தம்மீது புலவர் பெருமக்கள் வஞ்சினம் கூறுவதைக்கூடப் பெருமையாகக் கருதினான் அவன்!

நான் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் அல்லன்; அமைச்சர் நெடுஞ்செழியனாக உள்ளேன்.

முன்பெல்லாம் மன்னர் இருக்கும் இடம் தேடிப் புலவர்கள் சென்றார்கள்; இன்று அமைச்சனாகிய நான், 'நீங்கள் இருக்கிற இடம் தேடி வந்திருக்கிறேன்--நீங்கள் கூறுவதைக் கேட்க!

குறைகளைச் சொல்லுவீர்--களைய முயலுவோம்

'இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானும் கெடும்'

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். எனவே, தவறுகளைக் கள்ளங்கபடமற்ற தன்மையில்-- நாணயமான முறையில் சுட்டிக் காட்டுவது எழுத்தாளர்தம் கடமையாகும்.

என்னைப் பொறுத்தவரையில், நாட்டில் உள்ள அத்தனைக் கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், துவக்கப் பள்ளிகளிலும் என்னென்ன நடக்கின்றன --என்னென்ன தவறுகள், குறைகள் உள்ளன என்பதை நான் அறிந்து வைத்திருக்க முடியாது.

எந்தப் பள்ளியிலாவது கல்லூரியிலாவது இன்ன குறை உள்ளது என்று எடுத்துரைத்தால் தான் அதைப் போக்க நான் முயற்சி செய்ய முடியும்.

கனவை நனவாக்குவீர்!

எழுத்தாளர்களிடமிருந்து இந்த நாடு நிரம்ப எதிர்பார்க்கிறது.

தமிழக அரசு தமிழ் அரசாக -- நல்ல அரசாக -- வல்லரசாகத் திகழ, தமிழில் நல்ல பல நூல்கள் வெளிவர வேண்டும்.

'பிற நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தெழுதப்பட வேண்டும்; இறவாத புகழ்படைத்த புதுப் புது நூல்கள் தமிழ் மொழியில் வெளிவர வேண்டும்' என்று பாரதி கண்ட கனவை நனவாக்க வேண்டும்!

சிந்தனை எப்படி வளரும்?

தமிழ்நாட்டில் 3½-கோடி பேர் இருக்கிறார்கள்; ஆனால் இங்கே எத்தனைப்பேர் புத்தகம் வாங்கிப் படிக்கிறார்கள்?

ஒருவர் நூல் வெளியிட விரும்பினால், 'ஆயிரம் படிகள் அச்சிடலாமா? அவ்வளவும் விற்குமா?' என்று ஆறு மாத காலம் சிந்திப்பார்; 'குறைந்தது 500 புத்தகமாவது விற்காதா' என்று துணிந்து வெளியிடுவார்; எஞ்சிய 500 புத்தகங்களையும், பத்திரிகைக்கு இரண்டு வீதம் மதிப்புரை எழுத அனுப்பி வைப்பார். இந்த 500 புத்தகங்களை விற்பதற்கும், நூல் நிலைய அதிகாரிகளையெல்லாம் பார்த்து -- அவர்களின் தயவைப் பெற வேண்டியிருக்கும். இப்படி இருந்தால், எழுத்தாளருக்கு எப்படி உரிய தொகை கிடைக்கும்? சிந்தனை எப்படி வளரும்?

வாழ வழிவகுப்பீர்!

மேலை நாடுகளிலெல்லாம் ஒருவர் ஒரு புத்தகத்தை வெளியிட்டால் போதும் -- அதில் கிடைக்கின்ற வருவாயைக் கொண்டே அவர் வாழ்நாள் முழுவதையும் கழித்துவிடலாம்.

ஒரு நூலை பத்து இலட்சம் படிகள் வரையில் அச்சிட்டு -- இங்கிலாந்திலே மட்டுமன்றி அமெரிக்கா, கானடா, ஆஸ்திரேலியா, மற்றும் ஆங்கிலம் தெரிந்த நாடுகளுக்கெல்லாம் அனுப்பி வைக்கிறார்கள்; அவை நன்கு விற்பனையாகின்றன. நாமோ, இங்கு ஆயிரம் படிகள் அச்சிட்டால்கூட வாங்குவாரின்றி நட்டப்படுகிறோம்.

எழுத்தாளர்கள் வாழ வேண்டுமானால் -- அவர்களுடைய சிந்தனை வளர வேண்டுமானால் -- நூல்கள் பெருகவேண்டும்.

'நூலக இயக்கத்தை வளர்க்க வேண்டும்' என்று நானும் முயற்சி செய்து வருகிறேன்.

சென்ற ஓராண்டில் மட்டும் ரூ. 80 இலட்சம் வரை நூல்களுக்காக அரசு செலவு செய்துள்ளது.

இந்திய அரசு, சங்கீத -- நாடகத் துறையில் ஓய்வு பெற்ற முதியவர்களுக்கு—அவர்களைக் காப்பாற்ற யாரும் இல்லையானால்— மாதம் ரூ 150 வரை உதவும் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தில் எழுத்தாளர்களையும் இணைத்துக் கொள்ளுமாறு நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். வறுமையில் வாடும் 58 வயதுக்கு மேற்பட்ட எழுத்தாளர்கள் அதன் மூலம் பயனடைய வழிபிறக்கும்.

இடம் பெற இயலாமலே இறந்துவிட்டார்!

உங்கள் சங்கம் நல்ல முறையில் வளர்ந்து, பிரான்சு நாட்டிலுள்ள 'பிரெஞ்சு அகாடமி' போலத் திகழவேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

பிரெஞ்சு அகாடமியில் உறுப்பினராகச் சேருவது என்பதே மிகவும் கடினம்; யார் எவ்வளவு பெரிய எழுத்தாளராகப் புகழ் பெற்றிருந்தாலும், பிரெஞ்சு அகாடமியில் சேர விண்ணப்பம் அனுப்பினால், அதனை அவ்வளவு எளிதில் ஏற்றுக்கொள்வதில்லை. பலர் விண்ணப்பம் போட்டுப் போட்டு, இறுதிவரை அதில் சேர முடியாமலே போய்விட்டார்கள்.

புகழ்பெற்ற எழுத்தாளர் எமிலி ஜோலா, தாம் இறக்கும்வரை பிரெஞ்சு அகாடமியில் இடம் கேட்டுப் போராடிப் பார்த்துவிட்டார் -- கிடைக்கவில்லை. அதில் இடம்பெற முடியாமலே இறந்துவிட்டார்.

தரம் ஓங்க வேண்டும்!

அதேபோல், நம் நாட்டிலும் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இடம் கிடைப்பது என்பது சங்ககாலத்தில் புலவர்கட்கு எளிதான காரியமல்ல!

அதேபோல், இந்தத் தமிழ் எழுத்தாளர் சங்கமும் உயரவேண்டும். 'நமக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தில் இடம் கிடைக்குமா' என்று ஒவ்வொரு தமிழ் எழுத்தாளரும் ஏங்கவேண்டும். அந்த அளவுக்கு இதனுடைய தரமும் புகழும் ஓங்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

முயன்றால் முடியாதா?

கட்டிடம் கட்டப் பணம் தேவை என்றால், திரட்டுவது ஒன்றும் கடினமல்ல; திட்டமிட்டு முறையாக முயற்சி செய்தால் வெற்றி பெறலாம்.

'இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை இங்கே எப்படி நடத்துவது' என்று — விரல் விட்டு எண்ணக்கூடிய சிலர் மட்டுமே கூடி யோசித்தனர்; அவர்களுடைய முயற்சியால் தான், சென்ற ஆண்டு உலகமே கண்டு வியக்கும் அளவுக்கு மாநாட்டை நடத்திக் காட்டினோம்.

அரசுக்கு ஒரு காசு கூடச் செலவில்லாமல் அந்த மாநாட்டை நடத்தினோம்; ரூ. 17 இலட்சம் செலவில் மாநாட்டை நடத்தினோம்; ஊர்வலத்துக்கு மட்டும் ரூ. 6½ இலட்சம் செலவாகியிருக்கிறது; ஊர்வலத்தில் வந்த ஒவ்வொரு அலங்கார ஊர்திக்கும் 50 ஆயிரம் வரை செலவிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஸ்டுடியோ உரிமையாளரையும் பார்த்து, பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தோம்; அவர்கள் செலவை ஏற்றுக்கொண்டார்கள்.

எனவே, தமிழுக்காகவும், தமிழ் எழுத்தாளர்களுக்காகவும், உதவி செய்யும் உள்ளம் படைத்தவர்கள் தமிழகத்தில் பலர் இருக்கின்றனர்; அவர்களை அணுகலாம். நீங்கள் விடா முயற்சியுடன் பணியாற்றினால் எழுத்தாளர் சங்கத்துக்கென நல்லதொரு மாளிகையை எழுப்பலாம்.

'உடனே செய்யவேண்டும்' என்றுகூட நான் சொல்லவில்லை; 25 ஆண்டுக்கான திட்டம்கூட வகுத்துக்கொண்டு, ஆண்டுக்கு ஆண்டு ஒவ்வொரு கட்டமாகத் திட்டத்தை நிறைவேற்றலாம்.

'ஒன்றே செய்யினும் நன்றே செய்க -- அதனை இன்றே செய்க' என்ற பழமொழிக்கிணங்க, இன்றே உங்கள் முயற்சியை -- ஒன்றுபட்ட முறையான முயற்சியைத் தொடங்குங்கள்; நானும் என்னாலான ஒத்துழைப்பை நல்குகிறேன்.''

13—9—68-ல், கல்கத்தா-அவுராவில் இயங்கிவரும் வங்கத் தமிழர் சங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு. எஸ். எஸ். மாரிசாமி (சுதந்திரா) அவர்கட்கும், திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி (தி.மு.க.) அவர்கட்கும் வரவேற்பு அளித்தது; வரவேற்புக்கு நன்றி தெரிவித்து திரு வெ. கிருஷ்ணமூர்த்தி சிறப்புரையாற்றுகிறார். படத்தில் சங்கத் தலைவர் டி. என். தங்கதுரை அவர்களும் அமர்ந்திருக்கிறார்.

ஆசிரியருக்குக் கடிதம்

அஞ்சல்துறை கவனிக்க

ஐயா,

சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டத்தைச் சேர்ந்த முத்துநாய்க்கம்பட்டியில் தற்போது தேவைக்கு ஏற்ப அஞ்சல்துறை வசதியில்லை. தந்தி எக்ஸ்பிரஸ் கடிதம் அனுப்ப வசதியில்லை. தொலைபேசி வசதியுமில்லை.

ஆகவே, முத்துநாய்க்கம்பட்டியில் ஒரு தபால் தந்தி நிலையம் திறக்கவும், தொலைபேசி வசதி செய்யவும் சென்னை அஞ்சல்துறை அதிகாரிகள் ஆவன செய்வரா?

இவ்வூரில் உயர்நிலைப் பள்ளி, கூட்டுறவு சங்கங்கள், ஊராட்சி அலுவலகம் ஆகியவை உள்ளன.

மற்றும் சேலம் இரயில் சந்திப்பிலிருந்து உந்து வண்டி வசதியும் உள்ளது.

ஏ. நடராசன்
முத்துநாயக்கம்பட்டி

குமரி மாவட்ட தி.மு.க.

செயற்குழு முடிவுகள்

25—9—68-ல், குமரி மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் வடசேரி பயணியர் விடுதியில் நடைபெற்றது; அதுபோது, 13—10—68 அன்று அமைச்சர் கருணாநிதி வருகை தரவிருப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு கீழ்க்காணும் முடிவு எடுக்கப்பட்டது:—

அன்று அண்ணா பிறந்த நாள் விழாவை மாவட்ட அளவில் சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், அண்ணா கவியரங்கம் நடத்துவதென்றும், அமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு மாபெரும் வரவேற்பு அளிப்பதென்றும், மாலையில் ஊர்வலமும், வடசேரி வஞ்சியாதித்தன் தெருவில் பொதுக்கூட்டமும் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் பி. ஆர். நீலகண்டன் தலைமை தாங்கினார். 43 உறுப்பினர்களில் 32 உறுப்பினர்கள் வந்திருந்தனர்.

பிறப்பு

வடசேரி தி.மு.க. செயலாளரும் மாவட்டப் பிரதிநிதியுமான எஸ். ஆர். மணி அவர்களின் துணைவியார் காமாட்சி அவர்கட்கு 22—9—68 அன்று ஆண் குழந்தை பிறந்ததன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 வரப்பெற்றோம் —நன்றி.

வெறுங் கையுடன் திரும்பினர் மொரார்ஜி!

எட்டாப் பழமாகிறது வெளிநாட்டு உதவி!

'திட்டங்களைச் சுருக்கிக் கொள்ளலாம்' என மனச்சாந்தி

புதுடில்லி, அக். 8—

" எதிர்பார்த்தபடி அந்நிய நாடுகளிடமிருந்து நிதி உதவி கிடைக்கவில்லையென்றால், அதற்கேற்ப இந்திய வரவு-செலவுத் திட்டத்தை மாற்றியமைப்பதுடன், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் அதற்கேற்பத் தயாரிக்க வேண்டியிருக்கும்"

என்று, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டுத் திரும்பியுள்ள நிதியமைச்சர் மொரார்ஜி தேசாய், விமான நிலயத்தில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.

" 28 இலட்சம் டன் உணவுத் தானியம் வழங்கவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கை மீது அமெரிக்கா, உடனடியாக நடவடிக்கை எடுக்கும் வாய்ப்பில்லை " என்றார்.

" அனைத்து நாட்டு வளர்ச்சி நிறுவனத்தின் நிதியிலிருந்து உதவி அளிப்பதற்காக மேற்கொண்டு பணம் அளிப்பது சம்பந்தமாக டிசம்பருக்குள் முடிவு எதுவும் ஏற்பட்டு விடாது " என்றார்.

" அமெரிக்க அதிபர் தேர்தலானது, இப்பிரச்சினைகளில் சங்கடங்களைத் தோற்றுவித்திருக்கிறது; தேர்தலுக்குப் பிறகுதான் நிலைமை தெளிவுபடும்" என்றார்.

"அந்நிய உதவிக்கான வாய்ப்பு எப்படியிருக்கிறது?" என்று கேட்டபோது, 'வாய்ப்புகள் நம்பிக்கை தருவதாயிருக்கிறது என்றே எப்போதும் கருதப்பட வேண்டும்' என்றார்.

நடக்க இருப்பவை

9--10--68

கூம்பூர்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர் : வீ. சி. வீரராசன் ; பேசுவோர் : இரா. இராமலிங்கம், செ. தம்பித்துரை, ப. முத்துசாமி, வி. நாகசுந்தரம், எம். கே. ஏ. சாமி.

குடியேற்றம்

13-வது வட்ட தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு பிச்சனூர் ஆர். எஸ். நகரில் ; தலைவர் : சி அப்துல் ரகீம்; பேசுவோர் : பாவலர் எம். எம். அப்துல் வகாப், பி. செயராமன் எம்.எல்.ஏ., செ. மா. அரங்கசாமி, ஈ. முருகன், தி. ச. சுப்பிரமணியம், ஏ. வி. துரைசாமி, ப. துரை ரா.சு, வேணுகோபால், ஜே. கே. நடேசன்.

சென்னை 15-வது வட்டம்

தி. மு. க. சார்பில் கழக வேட்பாளர் கே. கிருஷ்ணமூர்த்தியை ஆதரித்துத் தேர்தல் பிரசாரம் ; மாலை 7-மணிக்கு ஜீல்ஸ் தெருவில் (பிரபாத் டாக்கீஸ் அருகில்); தலைவர் : ந. முருகேசனார் ; பேசுவோர் : அமைச்சர் சாதிக் பாட்சா, என். வி. நடராசன் எம்.எல்.சி., ஏ. எஸ். கே. ஐயங்கார், என். ஆர். வீரஜின்னு, சிலார் மியான் எம்.சி., அ. செல்வராசன் எம்.சி , அ. அ. ஜின்னு, ந. இராமதாசு. (மாலை 6-மணிக்கு பவளக்காரத் தெருவில் தி. மு. க. தேர்தல் அலுவலகத்தை அமைச்சர் சாதிக் பாட்சா திறந்துவைப்பார்).

10--10--68

கொ. மீனாட்சிபுரம்

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு அம்மன் கோவில் முன் ; தலைவர் : க. இசுரவேல் ; கொடியேற்றுபவர் : அ. கருப்பையா ; பேசுவோா : மு. சுந்தரராசன், ப. பெ. ந. நல்லதம்பி, கா. பிச்சை, இரா. வேல்சாமி. (தேவராசன்–நிர்மலா குழுவினரின் கலைநிகழ்ச்சி நடைபெறும்).

நெடுங்காடு

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு மாரியம்மன் கோவில் அருகில் ; தலைவர் : அ. வேல்மயில் ; பேசுவோர் : ம. கோ. மணி, தம்பிதேவேந்திரன் எம்.சி., ப. அ. கரீம், அ. லூர்துசாமி, எஸ். இராமசாமி, எஸ். சண்முகம்.

திராவிட முன்னேற்ற கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் (24, [illegible] தெரு, சென்னை-18) [illegible] வெளியிடப்படுகிறது.

700 பேர் சாவு --- 4,000 பேர் கைது

மிஜோ மலைப்பகுதியில் இந்திய அரசு நடவடிக்கை

ஷில்லாங், அக். 7—

மிஜோ மலை மாவட்டத்தில், 1966 மார்ச் 1-ல் கலகம் ஏற்பட்ட பின்னர், இராணுவத்தினருடன் நடைபெற்ற போர்களில், சுமார் 700 மிஜோ கலகக்காரர்கள் உயிரிழந்தனராம்; 4,000-த்துக்கும் அதிகமானவர்கள் பிடிபட்டனராம்.

கலகக்காரர்களிடமிருந்து சுமார் 2,500 ஆயுதங்கள் கைப்பற்றப் பட்டனவாம்.

இராணுவம் --- போலீசுத் தரப்பில் 200-க்கும் அதிகமானவர்கள் இறந்தனரென்றும், 245 பேர் காயமடைந்தனரென்றும் செய்தி ஒன்று கூறுகிறது.

இளைஞர்கட்கு சாரணப் பயிற்சி

சென்னை, அக். 4—

" நாட்டுப் பற்றும், சகோதர உணர்ச்சியும் இளைஞர்களிடம் ஏற்பட, அவர்கட்குச் சாரணப் பயிற்சி அளிக்கப்பட வேண்டும் "

என்று, கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், காமன்வெல்த் சாரண தலைவர் சர் சார்லஸ் மச்ளீனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அரச மானிய ஒழிப்பு

ரெய்ப்பூர், அக். 7—

" அடுத்த மாதம் துவங்கும் நாடாளுமன்றக் கூட்டத் தொடரில், அரச மானிய ஒழிப்பு பற்றிய மசோதா தாக்கல் செய்யப்படும் "

என்று உள்துறை துணையமைச்சர் திரு. வி. சி. சுக்லா கூறினார்.

திருவல்லிக்கேணித் தொகுதித் தோழர்கட்கு

சென்னை–திருவல்லிக்கேணித் தொகுதியில் தேர்தல் பணிகளைக் கவனிக்க, பகுதிக் கழகப் பொருளாளர் தோழர் எஸ். ஏ. பாண்டியனிடம் முழுப் பொறுப்பு அளிக்கப்பட்டிருப்பதால், தொகுதி சம்பந்தமான எல்லா அலுவல்களுக்கும் அவருடனேயே தொடர்பு கொள்ளுமாறு, பகுதிச் செயலாளர் மு. வரதராசன் அறிவிக்கிறார்.

முகவரி :—எஸ். ஏ. பாண்டியன், 6, வி. ஆர். பிள்ளை தெரு, சென்னை-5.

சென்னை 86-வது வட்ட தேர்தல் அலுவலகத் திறப்பு

சென்னை 86-வது வட்ட தி.மு.க. தேர்தல் அலுவலகத் திறப்பு விழா, 9-10-68 மாலை 6-மணிக்கு சேப்பாக்கம்–பெரிய தெரு, 1 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும் ; திரு. கு. பிச்சை தலைமையில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்துவைப்பார்.

கா. காளிமுத்து நிகழ்ச்சிகள்

அக். 9 : மணவாளக்குறிச்சி ; 10 : ஏழாயிரம் பண்ணை ; 11 : கன்னிராசபுரம் ; 12 : மதுரை ; 13 : திருவாரூர்.

முருகுபாண்டியன் குழுவினர்

கலை நிகழ்ச்சிகள்

அக் : 11 : தோப்புத்துறை ; 12 : வேதாரண்யம் ; 13 : சடியாச்சேரி ; 14 : நல்லாத்தூர் (கடலூர்) ; 15-முதல் 20-வரை : சென்னை ; 27, 28, 29 : செங்கற்பட்டு மாவட்டம் ; 30 : விழுப்புரம் வட்டம் ; 31 : பள்ளிநேலியனூர் பாளையம்.

பண்டைத் திராவிட நாகரீகச் சின்னத்துக்கு ஆபத்து

மொகஞ்சதாரோ நகரை நெருங்குகிறது வெள்ளம்

சிந்துவெளி ஆராய்ச்சி குந்தகப்படுமா?

டாக்கா, அக். 7—

உலகிலேயே மிகப் பண்டைய நகரங்களுள் ஒன்றான மொகஞ்சதாரோ, வெள்ளத்தில் அழியும் அபாயம் ஏற்பட்டுள்ளது; சிந்து நதி வெள்ளம் இந்த நகருக்கு 2 கிலோ மீட்டர் தொலைவை எட்டியுள்ளது.

சிந்து நதியின் வலது கரையிலுள்ள மொகஞ்சதாரோ 5,000 ஆண்டுகளுக்கு முன்பு புகழுடன் விளங்கிவந்த நகரம் என்பதும், புதைபொருள் ஆராய்ச்சியாளர்களின் கவனத்தை மிகவும் கவர்ந்துள்ளது என்பதும் தெரிந்ததே.

சிந்து நதி தீரத்தின் நாகரிகம் பற்றிய பல அரிய உண்மைகள் இந்த நகரின் மேடுகளுக்கு அடியில் மறைந்துகிடக்கின்றன. அவற்றைத் தோண்டி எடுத்து பண்டைய நாகரிகம் பற்றிய பல அரிய தகவல்களைக் கண்டறிவதில் ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பண்டைய நகரம், 1921-ஆம் ஆண்டில்தான் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இதில் மூன்றில் ஒரு பகுதி தான் ஆராயப்பட்டுள்ளது.

இப்போது இங்கரை அச்சுறுத்திவரும் வெள்ளம்இதை மூழ்கடித்துவிட்டால், எத்தனையோ அரிய தகவல்கள் தெரியாமலே போய்விடும்.

சுப்பேரியன் சகாப்தத்தைச் சேர்ந்த மக்கள் பயன்படுத்தி வந்த எழுத்துக்கள் இங்கு ஏராளமாக உள்ளன. ஆனால் அவற்றை இன்னும் யாராலும் புரிந்துகொள்ள முடியவில்லை.

அந்தக் காலத்திலேயே ஒழுங்கான வீதி அமைப்பு, சிறந்த சாக்கடைத் திட்டம், பொது குளியல் அறைகள் ஆகியவற்றுடன் விளங்கிய நகராகும் இது!

மண்ணில் மறைந்த நகரான மொகஞ்சதாரோ திராவிட நாகரிகத்தின் சின்னமாக வரலாற்றாசிரியர்களால் மதிக்கப்படுவதாகும்.

தமிழகத் தொழில் வளத்துக்கு நம்பிக்கையூட்டும் நற்செய்தி

காவிரிப் படுகையில் எண்ணெய் கிடைக்க வாய்ப்பு

'இதுவரை செய்த முயற்சி வீண் போகவில்லை'--- ஆய்வுக் குழு அதிகாரி பெருமிதம்

சென்னை, அக். 7 —

" காவிரியாற்றுப்படுகையில் எண்ணெய் கண்டுபிடிப்பதற்காக நடத்தப்படும் சோதனை கைவிடப்பட மாட்டாது ; இதுவரையில் பாடுபட்டது வீண் போகவில்லை.

" எண்ணெய் கண்டுபிடிக்கும் நோக்கம் இதுவரையில் கைகூடவில்லையாயினும், தரைக்கு அடியில் உள்ள பாறை அமைப்புகள் குறித்து நிறையத் தகவல் சேகரிக்கப்பட்டுள்ளன.

" நாங்கள் தோண்டும் இடத்தைப்பற்றி இப்பொழுது எங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது ; 'எண்ணெய் கண்டுபிடித்துவிட முடியும்' என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம் ; ஆனால், 'அது எந்த இடத்தில் இருக்கிறது' என்பதைத்தான் இந்தக் கட்டத்தில் திட்டவட்டமாகச் சொல்ல இயலவில்லை "

என்று, எண்ணெய் -- இயற்கை வாயுக் குழு அதிகாரி ஒருவர் தெளிவுபடக் கூறியுள்ளார்.

வடக்கே புதுச்சேரியிலிருந்து தெற்கே இராமனாதபுரம் வரையில்—மேற்கே விருதுநகரிலிருந்து கிழக்கே கடற்கரை வரையில்—இந்த எண்ணெய் தோண்டும் ஆராய்ச்சி 1963-ம் ஆண்டிலிருந்து நடைபெறுகிறது.

இதுவரையில் காரைக்கால், திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் 8 மேல்மட்டக் கிணறுகளும், 7 ஆழ்கிணறுகளும் தோண்டப்பட்டுள்ளன.

சீர்காழிக்கு அருகிலுள்ள மாதானம், சிதம்பரம் ஆகிய இடங்களிலும் கிணறுகள் தோண்டிப் பார்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

நில நடுக்கம் பற்றி நடத்திய ஆராய்ச்சியிலிருந்து இராமேசுவரம், இராமநாதசுவாமி கோயிலுக்கு வடக்கே ஒரு மைலில் எண்ணெய் கிடைத்துள்ளது.

காரைக்காலில் முதலில் தோண்டிய கிணற்றில் எண்ணெய் காணப்பட்டது; தங்கள் முயற்சிகள் வீண் போகவில்லை -- வீண் போகாது என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.

இதுவரை எண்ணெய் -- இயற்கை வாயுக் குழு கண்டுபிடித்துள்ள விவரங்களை ஆராய்ந்து, காவிரிப் படுகையில் எண்ணெய் கிடைக்குமா என்பதை முடிவு செய்ய இரஷ்ய நிபுணர் ஒருவர் சென்னைக்கு வந்துள்ளார்.

சென்னை 92-வது வட்ட தி. மு. க. ஊழியர் கூட்டம்

சென்னை 92-வது வட்ட தி.மு க. ஊழியர் கூட்டம், 10—10—68 இரவு 8-மணிக்கு அரங்கநாதபுரம் தெரு, 14-எண்ணுள்ள கழகப் பணிமனையில் நடைபெறும் ; கழக உறுப்பினர்கள் -- ஆதரவாளர்கள் -- துணைமன்றத் தோழர்கள் தவறாமல் கலந்துகொள்ளுமாறு செயலாளர் வி. குப்புசாமி கேட்டுக்கொள்கிறார்.

கோவையில் அண்ணு பிறந்த நாள்

சிறப்புமிக்க ஊர்வலம்-பொதுக்கூட்டம்

" கோவை நகரில் அறிஞர் அண்ணாவின் 60-வது பிறந்த நாளினையொட்டி 29—9—68-ல் நடைபெறவிருந்த ஊர்வலமும் பொதுக்கூட்டமும் தள்ளிவைக்கப்பட்டு 9—10—68 அன்று நடைபெறவிருக்கிறது. பொதுப் பணி அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் ஊர்வலத்திலும், பொதுக்கூட்டத்திலும் கலந்துகொள்கிறார்.

" ஊர்வலத்தில் யானை முன் செல்ல—எம். ஆர். ஆர். வாசு குதிரைமீது கொடி பிடித்துவர—அவரைத் தொடர்ந்து குதிரைப் படை அணியும்—தொடர்ந்து கழகத் தோழர்கள் அணிவகுப்பும் வரவிருக்கின்றன.

' ஒவ்வொரு வட்டாரத்தின் சார்பிலும் சிலம்பாட்டம், மயிலாட்டம், கரக ஆட்டம் போன்ற நிகழ்ச்சிகளும நடைபெறும் ; தாரை—தப்பட்டை, நாதசுரம், பேண்டு, கேரள செண்டை, மற்றும் கிராம வாத்தியக் குழுவினரும் ஊர்வலத்தில் பங்கு பெறுவர்.

" ஒவ்வொரு வட்டாரத்தின் சார்பிலும் மிகச் சிறந்த முறையில் அலங்கரிக்கப்பட்ட வண்டிகள் ஊர்வலத்தில் கொண்டுவருவார்கள். ஊர்வலம் மிகப் பெரிய அளவில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் மிகச் சிறந்த வண்டிக்கு அமைச்சர் கருணாநிதி அவர்களால் வெள்ளிக் கோப்பை பரிசு வழங்கப்படும் ; பரிசுக் கோப்பையை திரு. கே. எம். சின்னையன் கொடுத்திருக்கிறார்.

" ஆர். எஸ். புரம் கிளப் மைதானத்திலிருந்து ஊர்வலம் புறப்பட்டு நகரின் முக்கிய வீதி வழியாகச் சென்று சிதம்பரம் பூங்காவை அடையும் ; அங்கு கோவை மாவட்டச் செயலாளர் எஸ். ஏ. இராசமாணிக்கம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெறும் ; அமைச்சர் மு. கருணாநிதி, ப. நாராயணன் எம்.பி., பி. ஏ. சாமிநாதன் எம்.பி., கோவிந்தராசு எம்.எல்.ஏ., கோவை நகரச் செயலாளர் கி. அரங்கநாதன், கோவை வட்டச் செயலாளர் தெ. கு. மெய்யப்பன், மற்றும் வட்டச் செயலாளர்கள் — சட்டமன்ற உறுப்பினர்கள் பலரும் பேசுவர் "

என்று நகரச் செயலாளர் கி. அரங்கநாதன் அறிவிக்கிறார்.